+2 வணிகவியல் ஆண்டு இறுதித் தேர்வு மே -2022

**சரியான விடை 20X1=20**

| A Type | B Type |
|---|---|
| 1. (அ) வேலைப்பகிர்வு | (ஈ) மேற்சொன்ன அனைத்தும் |
| 2. (ஈ) மேற்சொன்ன அனைத்தும் | (இ) இரண்டு |
| 3. (இ) அறிவியல் மற்றும் கலை | (ஆ) தாராளமயமாக்கல் |
| 4. (அ) 1930 | (இ) அ மற்றும் ஆ சரியானது |
| 5. (ஈ) 24 | (இ) அறிவியல் மற்றும் கலை |
| 6. (ஆ) பங்குசந்தை | (அ) ஊழியர் |
| 7. (ஈ) மேற்கூறிய அனைத்தும் | (அ) நுகர்வோர் திருப்தி |
| 8. (ஆ) சட்டமுறை | (ஈ) புறவளங்கள் |
| 9. (இ) அ மற்றும் ஆ சரியானது | (ஆ) தேர்வு |
| 10. (அ) ஊழியர் | (அ) வேலைப்பகிர்வு |
| 11. (அ) நுகர்வோர் திருப்தி | (ஈ) மேற்கூறிய அனைத்தும் |
| 12. (அ) நீண்டகால நிதி | (ஆ) மேலாளர் |
| 13. (ஈ) புறவளங்கள் | (ஆ) பங்குசந்தை |
| 14. (இ) இரண்டு | (அ) 1930 |
| 15. (ஆ) வாடிக்கையாளர் | (ஆ) சட்டமுறை |
| 16. (ஆ) மேலாளர் | (ஆ) வாடிக்கையாளர் |
| 17. (ஆ) முடிவெடுத்தல் | (அ) நீண்டகால நிதி |
| 18. (ஆ) தேர்வு | (ஆ) முடிவெடுத்தல் |
| 19. (ஆ) தாராளமயமாக்கல் | (ஆ) 1960 |
| 20. (ஆ) 1960 | (ஈ) 24 |

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. மேலாண்மை:** மேலாண்மை என்பது முன் கணிப்பு செய்தல், திட்டமிடல், ஒழுங்கமைப்பது, கட்டளையிடுவது, ஒருங்கிணைப்பது, கட்டுப்படுத்துவது – **ஹென்றி.ஃபோயல்**

**22. பங்குச் சந்தை:** பங்குச் சந்தை என்பது பெருநிறுவன மற்றும் பிற பத்திரங்கள் வாங்குவதற்கும் விற்பனை செய்வதற்கும் ஒரு ஒழுங்கமைப்பட்ட சந்தையாகும்.

**23.மனித வள மேலாண்மையின் இயல்புகளில் ஏதேனும் 2 கூறுக.** இலக்கு சம்பந்தமானது, உலகளவில் பொருத்தமானது, தொடர்ச்சியான செயல்பாடு, மாறுபடும் செயல்பாடு

**24. களச்சந்தை** பொருளுக்கான விற்பனை நடவடிக்கை முடிவடைந்த அதே நேரத்தில் அப்பொருள் விநியோகம் செய்வது மட்டுமின்றி உடன் உரிமை மாற்றமும் செய்யப்படுகிறது.

**எதிர்கால சந்தை:-** ஆவணமும், ரொக்கமும் பின் ஒரு நாளில் பெறுதல்.

**25. கலப்படத்திற்கு நான்கு எடுத்துக்காட்டுகள் தருக.**
தேங்காய் எண்ணெயில் பாமாயில் கலப்பது.
மிளகுடன் பப்பாளி விதை சேர்ப்பது.
மிளகாய் பொடியுடன் செங்கல் பொடி சேர்ப்பது
காப்பி பொடியுடன் புளிவிதைப் பொடி சேர்ப்பது

**26. தனியார்மயமாக்கல்:** பொதுத் துறைக்கு ஒதுக்கப்பட்ட தொழில்களை தனியார் துறைக்கு மாற்ற அனுமதி அளிப்பதாகும்.

**27. நிகழ்சரக்கு சரக்கு:** இது ஒரு வகை எதிர்கால சரக்கு ஆகும். இது விற்பவர் கைவசம் வந்து சேர்வது, எதிர்காலத்தில் நடக்கும், நிகழ்ச்சியைப் பொறுத்தது.

**28. மகளிர் தொழில் முனைவோர் சந்திக்கும் சிக்கல்கள் ஏதேனும் 2**
நிதிப்பிரச்சனை, இயக்கத் தடை, கல்வியறிவு இன்மை, ஆதரவு இன்மை, கடும் போட்டி, உணர்ச்சி வயப்படல், போதிய விவரமின்மை

**29. டிஜிட்டல் இந்தியா:** இத்திட்டத்தின் மூலம் அனைத்து அரசின் சேவைகளும் பயனாளிகளுக்கு மின்னணு முறையில் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் இந்திய பொருளாதாரம் மின்னணு பொருளாதாரமாக மாறி வருகிறது.

**30. ஒரு நிறுமத்தில் முக்கிய நபர்கள்:** முதன்மை பிரதான நிர்வாக அதிகாரி, நிர்வாக இயக்குனர் அல்லது மேலாளர், நிறுமத்தில் செயலாளர், முழுநேர இயக்குனர், முதன்மை பிரதான நிதி அலுவலர், நிர்வாகத்திற்கு தேவையான மற்ற அலுவலர்.

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X3=21**

| 31. அடிப்படை | மேலாண்மை | நிர்வாகம் |
|---|---|---|
| அதிகாரம் | மத்திய மற்றும் கீழ்மட்ட அளவில் | உயர்மட்ட அளவில் |
| பங்கு | நிறைவேற்றம் | முடிவெடுத்தல் |
| முக்கிய நபர் | மேலாளர் | நிர்வாகி |
| தொடர்பு தன்மை | கொள்கையை செயல்படுத்தல் | கொள்கைகளை உருவாக்குதல் |

**32. கருவூல இரசீதின் பொது இயல்புகள் யாவை?**
வெளியிடுபவர், நிதி இரசீது, நீர்மைத் தன்மை, முக்கிய ஆதாரம், பண மேலாண்மை

**33. கலை மான்:-** கலைமான் ஊக வணிகர் முன்னெச்சரிக்கை உடையவர். ஒரு நிறுமத்தின் பங்குகள் முனைமத்தில் விற்கப்படும் போது அதைப்பெற்று விற்கக் கூடியவர். இவர் முனைம வேட்டையாளர் என்று அழைக்கப்படுகிறார்.

**34. வேலைவாய்ப்பு இணையதளங்கள்** என்பது இணையத்தின் வழியாக வேலை தேடுவோர்களையும் வேலை வழங்குநர்களையும் இணைக்கும் ஓர் இணையதளம் ஆகும்.

**35. சந்தையிடுகையின் நோக்கங்கள் யாவை?** நவீன சந்தையிடுகை கொள்கையானது அறிவுத் திறத்தை பயன்படுத்த உதவுகிறது. சந்தையிடுகை துறையில் மேம்பாட்டை ஏற்படுத்துகிறது, சந்தையிடுகை தொடர்புள்ள பிரச்சனைகளுக்கு தீர்வு காண வழிவகை செய்கிறது.

**36. நிவாரணத்திற்கான உரிமைகள் பற்றி நீவிர் அறிந்தது என்ன?**
பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய காலத்திற்குள் இழப்பீடு வழங்க வேண்டும். நுகர்வோரின் புகார்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் கோரிக்கைகளை உடனடியாக சரி செய்ய வேண்டும்.

**37. புதிய பொருளாதாரக் கொள்கை பற்றி சிறு குறிப்பை எழுதுக.**
உலக வங்கி மற்றும் சர்வ தேச நாணய நிதியத்தின் நிலைமைகளுக்கு இந்தியா உட்பட்டு மற்றும் பல்வேறு பொருளாதார சீர்திருத்தங்கள் கொண்ட புதிய பொருளாதாரக் கொள்கையை அறிவித்தது. அவை. தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல், உலகமயமாக்கல். இவை LPG என அழைக்கப்படுகிறது

**38. தற்போதைய / இருக்கின்ற சரக்கு என்றால் என்ன?**
ஒப்பந்தம் செய்யும் போது விற்பனையாளரின் கைவசம் உள்ள சரக்கு இருக்கின்ற சரக்கு ஆகும். விற்பனை செய்ய முகவரின் வசம் ஒப்படைக்கப்பட்ட சரக்கும், அடமானம் பெற்றவர் விற்கும் அடமான சொத்தும் உள்ளடங்கும்.



Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

**39. ஸ்டாட்டப் இந்தியா:** தொடக்க நிலையில் உள்ள தொழில்கட்கு ஆலோசனை வழங்குவது, வளர்ப்பது, ஆதரவு அளிப்பது, போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்வதாகும். இது 2016ம் ஆண்டு சனவரியில் துவங்கியது. நிதிகளின் நிதியின் மூலம் நிதி வசதி அளிக்கிறது.

**40.**நிறுமக் கலைப்பின் போது தங்கள் பங்குகளை முதலில் திரும்ப பெறுபவர்: **முன்னுரிமைப் பங்குதாரர்**

நிறுமச் சட்டம் 2013 பிரிவு 42 ன்படி முன்னுரிமப் பங்குகள் என்பது முன்னுரிம பங்குதாரர்கள் நிறுமம் இயங்கும் போதும் கலைப்பின் போதும் சாதாரண பங்குதாரர்களை விட முன்னுரிமை பெறுபவர் ஆவர்.

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35**

**41.அ. மேலாண்மையின் பல்வேறு முக்கியப் பணிகள்**

**திட்டமிடல்:-** முன் கூட்டியே முடிவெடுத்தல். வருங்கால தேவைகளை பூர்த்தி செய்ய மதிப்பிடுதல்.

**ஒழுங்கமைத்தல்:-** உறுப்பினர்களிடையே இணக்கமாக உறவை ஏற்படுத்துதல். பணியாளர்களுக்கு சரியான பணிகளை வழங்குதல் மற்றும் பொறுப்பு ஏற்றல்.

**பணி அமர்த்துதல்:-** பணிக்கேற்ப பணியாளர்களை தேர்ந்தெடுத்தல். குறிப்பிட்ட கால இடைவெளியில் பயிற்சி அளித்தல். பணியாளர்களின் செயல்திறனை மதிப்பீட்டு ஊக்கம் அளித்தல். (பணப்பலன், பதவி உயர்வு)

**இயக்குவித்தல்** இலக்குகளை அடைய தொடர்ச்சியாக வழிகாட்டுதல் கூட்டம், கையேடுகளை, சுற்றறிக்கை போன்றவை மூலம் தகவல்களை அளித்தல்.

**ஒருங்கிணைத்தல்:-**பல்வேறு திறமையுள்ள நபர்களை இணைத்தல். அனைத்து செயல்பாடுகளையும் இணைத்தல

**41.ஆ. இந்தியப் பொருளாதாரத்தில் LPG- யின் தாக்கத்தை விளக்குக?**

புதிய வெளிநாட்டு வர்த்தக ஒப்பந்தங்களை அறிமுகம் செய்வது.
வணிகக் கட்டுப்பாடுகளை அகற்றுதல்.
பல்வேறு பொருள்களுக்கு புதிய சந்தை வாய்ப்பை உருவாக்கியது.
வெளிநாட்டு நேரடி முதலீட்டை உருவாக்குகிறது.
நுகர்வோர் பொருட்களின் சந்தையை பெருக்கிட உதவியது.

| 42.அ. தன்மைகள் | பணச் சந்தை | மூலதனச் சந்தை |
|---|---|---|
| நிதியின் காலம் | ஒரு வருட காலத்திற்குள் அதாவது குறுகிய காலச் சந்தை | ஒரு வருட காலத்திற்கும் மேல் அதாவது நீண்ட காலச் சந்தை |
| வணிக ஆவணங்கள் | வணிக இரசீதுகள், மாற்றுமுறை ஆவணங்கள், கருவூலச் சீட்டு, வணிகத்தாள் போன்றவை | பங்குகள், கடனீட்டுப் பத்திரங்கள், அரசுப் பத்திரங்கள் |
| பண மதிப்பு | ஒரு கருவூல இரசீதின் குறைந்தபட்ச மதிப்பு ரூ 1இலட்சம் வைப்புசான்றிதழ் மற்றும் வணிகத்தாளின் குறைந்தப்பட்சமதிப்பு ரூ25 இலட்சம் | ஒரு பங்கின் குறைந்தபட்ச மதிப்பு ரூ 10 ஒரு கடனீட்டுப் பத்திரத்தின் குறைந்தபட்ச மதிப்பு ரூ 100 |
| இடர் அளவு | கடன் மற்றும் சந்தை ஆபத்து குறைந்த அளவு | கடன் மற்றும் சந்தை ஆபத்து குறைந்த அதிக அளவு |
| ஒழுங்குபடுத்தும் அமைப்பு | மையவங்கி | மைய வங்கி மற்றும் செபி |

| 42.ஆ அடிப்படை | நிபந்தனை | நம்புறுதி |
|---|---|---|
| பொருள் | இது ஒப்பந்தத்தின் கருப்பொருளாகும். | இது ஒப்பந்தத்தின் துணையாகும். |
| முக்கியத்துவம் | ஒப்பந்தத்தில் நிபந்தனையை மீறுவது ஒப்பந்தத்தையே மீறுவதாகக் கருதப்படும். | நம்புறுதியை மீறுவது ஒப்பந்தத்தின் மீறுவது ஆகாது. |
| உரிமை மாற்றம் | நிபந்தனை நிறைவேற்றாமல் உரிமை மாற்றம் நிகழ முடியாது. | நம்புறுதியை நிறைவேற்றாமல் உரிமை மாற்றம் நிகழலாம். |
| தீர்வு | நிபந்தனையை மீறினால் ஒப்பநதத்தால் பாதிக்கப்பட்ட நபர் ஒப்பந்தத்தை நீக்கிக் கொள்வதுடன் நட்டஈடு கோரும் உரிமையைப் பெறுகிறார். | நம்புறுதியை மீறுவதனால் ஒப்பந்தத்தில் பாதிக்கப்பட்டவர் நட்ட ஈடு கேட்கும் உரிமையை மட்டுமே பெற்றுள்ளார். |

**43.அ. ஏதேனும் ஐந்து பங்குச் சந்தை பணிகள்**

**உடனடி மற்றும் தொடர்ச்சியான சந்தை:-** ஒரு முதலீட்டாளர் தனது ஏற்கனவே வெளியிட்ட பத்திரங்களை எளிதில் விரைவாக பங்கு சந்தைகளில் விற்கலாம்.

**பத்திரங்கள் மதிப்பீடு:-** பத்திரங்கள் வாங்குதல் மற்றும் விற்பனை செய்யப்படும் விலை பதிவு செய்யப்பட்டுப் பொது மக்களுக்கு வழங்கப்படுகின்றன.

**முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பு:-** பங்குச் சந்தையில் முதலீட்டாளர்களுக்கு நியாயமான அளவீடு மற்றும் நடவடிக்கைகளை வழங்குகிறது.

**மூலதனத்தை சரியாக வழிப்படுத்துதல்:-** மக்கள் நல்ல இலாபத்தை ஈட்டக் கூடிய நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்தல்.

**மூலதன உருவாக்கம்:-** ஒரு நிலையான மூலதனத்தை தொழிற்துறையில் உறுதிப்படுத்துகிறது.



Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

**43.ஆ. கடன் பத்திரங்களின் வகைகள்**

**மாற்ற இயலாத கடன் பத்திரங்கள்:-** சாதாரண பங்குகளாக மாற்ற முடியாத கடன் பத்திரங்களை உள்ளடக்கியது.

**முற்றிலும் மாற்றத்தக்க கடன் பத்திரங்கள்:-** சாதாரண பங்குகளாக மாற்றக்கூடிய கடன் பத்திரங்களை உள்ளடக்கியது.

**மீட்கக்கூடிய கடன் பத்திரங்கள்:-** ஒரு குறிப்பிட்ட தேதியில் அல்லது காலத்தில் மீட்கக் கூடிய கடன் பத்திரங்களைக் குறிக்கும்.

**மீட்க இயலாத கடன் பத்திரங்கள்:-** நிறுமம் கலைக்கப்பட்டால் தவிர மற்றப்படி ஆயுள் காலத்தில் மீட்க தேவையில்லாத கடன் பத்திரங்கள்.

**பதிவு செய்யப்பட்ட கடன் பத்திரங்கள்:-** கடன் பத்திரங்கள் குறிப்பிட்ட நபர்களின் பெயரில் நிறுமப் பதிவேடுகளில் பதிவு செய்யப்படுவதாகும்.

**44.அ.ஆட்சேர்ப்பின் முறையில் உள்ள புறவளங்களை ஏதேனும் ஐந்து**

**நேர்முகத் தேர்வு:-** வேலை தேடி வருபவர்களை நேர்முக தேர்வின் மூலம் பணியமர்த்தலாம்.

**வளாகத் தேர்வு:-** கல்வி நிறுவனங்களுக்கு நேரடியாக சென்று தகுதியுடையவர்களை தேர்வு செய்யலாம்.

**தொழிற்சாலை வாயிலில் ஆட்சேர்ப்பு:-** பொதுவாக சாதாரண அல்லது தற்காலிக திறனற்ற ஊழியர்கள் இந்த வழியின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்றன.

**போட்டி நிறுவனங்கள்:-** உயர் ஊதியம் மற்றும் அதிக பலன்கள் வழங்குவதன் மூலம் போட்டி நிறுவனங்களில் உள்ள திறமையான பணியாளர்களை தம்முடைய நிறுவனத்தில் பணியாற்ற ஈர்க்கும் செயல் பணியாளர் வேட்டை என அழைக்கப்படுகிறது.

**வேலைவாய்ப்பு இணைய தளங்கள்:-** வேலை வாய்ப்பு இணைய தளங்கள் மூலம் தகுதியுடைய பணியாளர்களை உலகளவில் இணையத்தின் வாயிலாக பெறலாம்.

**44.ஆ. நுகர்வோரின் பொறுப்புகள்:** விற்பனை ஒப்பந்தப்படி பொருளுக்கான விலையை நுகர்வோர்கள் செலுத்த வேண்டும்.

விலை செலுத்தியவுடன் உரிய நேரத்தில் உரிய இடத்தில் பொருட்களைப் பெற்றுக் கொள்வது நுகர்வோரின் பொறுப்பாகும்.

குறித்த நேரத்தில் நுகர்வோர் பொருட்களைப் பெற்றுக் கொள்ளவில்லை என்றால் அதனால் ஏற்படும் நட்டத்திற்கே அவரே பொறுப்பாகும்.

நுகர்வோர் வாங்கியப் பொருட்களை அதன் விதிமுறை செயல்முறைக்கேற்ப முன்னெச்சரிக்கையுடன் பயன்படுத்த வேண்டும்.

நுகர்வோர் பொருட்களை வாங்கும் போது விற்பனையாளரிடமிருந்து ரொக்க இரசீது பெற வேண்டும்.

| 45 அ. மின்சந்தைப்படுத்துதல் | பாரம்பரிய சந்தைப்படுத்துதல் |
|---|---|
| பொருட்களை மிக விரைவாக குறைந்த செலவில் மேம்படுத்த முடியும். | மிக தாமதமாகவும் அதிக செலவிலும் மட்டும் மேம்படுத்த முடியும். |
| மிக விரைவில் மிக எளிதாக மேம்படுத்தி சந்தையிட முடியும். | அவ்வளவு எளிதாக உலகளவில் பொருள்களை மேம்படுத்த முடியாது. |
| மிக குறைந்தளவு மனிதவளத்துடன் தொழிலை விரிவுப்படுத்தலாம். | விரிவுப்படுத்த அதிக மனித வளம் தேவைப்படுகிறது. |
| வார 7 நாட்கள் 24 மணி நேரமும் குறைந்த மனித சக்தியுடன் சந்தையிட முடியும். | 7 நாட்களிலும் 24 மணிநேரமும் சந்தையிடுவது இயலாத காரியம். |

**45.ஆ. தொழில் முனைவோரின் சிறப்பியல்புகள்**

**தொழில் துணிகர உணர்வு:-** தொழிலில் ஏற்படும் இடர்களை துணிவுடன் எதிர் கொள்ள வேண்டும்.

**தன்னம்பிக்கை:-** எது நடந்தாலும் இந்த வினையை கைவிடேன், வெற்றி ஒன்றே இலக்கு என தொழில் முனைவோர் பயணிக்க வேண்டும்.

**நெகிழ்வு தன்மை:-** மாறும் சூழ்நிலைக்கு ஏற்ப தொழில் முனைபவர் தன் முடிவை அல்லது நடவடிக்கைகளை மாற்றிக் கொள்ள வேண்டும்.

**புதுமை புகுத்தல்:-** தொழில் முனைபவர் புதுமை படைப்பாளராக இருந்திட வேண்டும்.

**கடின உழைப்பு:-** தொழில் முனைபவர் செயலின் நோக்கத்தை அடைய கடின உழைப்பை மேற்கொள்ள வேண்டும்.

**46.அ. நுகர்வோர் பாதுகாப்பில் வணிகத்தின் பங்கினை விளக்குக.**

**விலைஉயர்வை தவிர்த்தல்:-** வணிகநிறுவனங்கள் பொருட்கள் நியாயமான விலையில் விற்க வேண்டும்.

**பதுக்கலைதவிர்த்தல்:-** செயற்கைப்பற்றாக்குறை ஏற்படுத்தும் விதமாக பொருட்களை பதுக்கி வைக்க வேண்டும்.

**தரத்திற்கு உத்திரவாதம் அளித்தல்:-** பொருட்களின் தரமோ, அளவோ குறையாத வண்ணம் நுகர்வோருக்கு அளிக்க வேண்டும்.

**பொருட்கள் குறித்த தகவல் அளித்தல்:-** வணிக நிறுவனங்கள் தங்கள் நிறுவனம் பொருட்களின் உண்மையான விவரங்களை நுகர்வோருக்குத் தரவேண்டும்.

**விளம்பரத்தில் உண்மை:-** விளம்பரங்களில் பொய்த் தகவல்களோ, மிகைப்படுத்தலோ இன்று நேர்மையான தகவல்களைத் தர வேண்டும்.



Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

**46.ஆ. எவையேனும் 5 வகையான நிதிச்சந்தைகள்**
நிதிச்சந்தைகள் நிதிகோருதல் அடிப்படையில் பிரிக்கப்படுகின்றன.
**வகை:- கடன் சந்தை :-** கடன் கருவிகளை வணிகம் செய்வது (எகா) அரசு பத்திரங்கள்
**சமநிலை பங்குச் சந்தை:-** பங்குளை வணிகம் செய்வது (எகா) நிறும பங்குகள்
**முதிர்வு:- பணச்சந்தை:-** குறுகிய காலத்தில் முதிர்வு அடைவது (ஒரு ஆண்டுக்குள்) (எகா) கருவூலச்சீட்டு
**மூலதனச் சந்தை:-** நீண்ட காலத்தில் அடைவது (ஓராண்டுக்கு மேல்) (எகா) பங்குகள்
**வெளியீட்டுக்காலம்:- முதல்நிலைச் சந்தை :-** புதிய வெளியீடுகளுக்கான சந்தை
**இரண்டாம் நிலைச் சந்தை:-** ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பங்குகளுக்கான சந்தை
**வழங்கல்:- உடனடிச் சந்தை:-** ஆவணமும், ரொக்கமும் உடனடியாக பெறுதல்.
**எதிர்கால சந்தை:-** ஆவணமும், ரொக்கமும் பின் ஒரு நாளில் பெறுதல்.
**அமைப்பு:- பரிமாற்றக வர்த்தகச் சந்தை:-** ஒழுங்கு நடைமுறைகளை கொண்ட அமைப்பு (பங்கு மாற்றகம்) **உடனடி சந்தை:-** வழக்கமான நடைமுறைகளை கொண்டது.

**47.அ. மின் சந்தைப்படுத்துதலின் நன்மைகள்:-**
**அனைத்து நேரத்திலும் சந்தை:-** மின் சந்தை வாரத்தின் 7 நாட்களிலும் 24 மணி நேரத்திலும் (24 x 7) பயனாளிகளுக்கு சந்தை வசதியை அளிக்கிறது.
**நேரடித் தொடர்பு:-** தயாரிப்பாளருக்கும் நுகர்வோருக்கும் இடையே நேரடித் தொடர்பு ஏற்படுவதால் செலவுகள் குறைக்கப்படுகிறது.
**தேவையை பெறுதல்:-** நுகர்வோர் தங்களுக்கு தேவைப்படும் எத்தகைய பொருள்களையும் மற்றும் சேவைகளையும் மின் சந்தையில் பல்வேறு தளங்கள் வலைப்பக்கங்கள் மூலம் பெறலாம்.
**மின் சந்தைப்படுத்துதலின் தீமைகள்:-**
**அதிக செலவு:-** மின் சந்தைப்படுத்துதலின் விளம்பரம் செய்யவும். வணிக தளம் அமைக்கவும், பெரிய அளவில் செலவிட வேண்டும்.
**சிறிய நிறுவனத்திற்கு பொருந்தாது:-** மிக தொலைவில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு பொருள் சேவைகள் வழங்க சிறிய நிறுவனங்களுக்கு மின்சந்தைப்படுத்துதல் பொருந்தாது.
**தகவல்களை புதுப்பித்தல்:-** தகவல்களை அவ்வப்பொழுது புதுப்பிப்பது மிகவும் கடினமான ஒன்றாகும்.

**47.ஆ. நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரி**
**வேலைப்பகிர்வு:-** தொழிலமைப்பின் மொத்த பணிச்சுமையும் பகிர்வு செய்யப்பட வேண்டும்.
**ஒழுங்குமுறை:-** கீழ்படிதல் முறைப்படி நடத்தல், அதிகாரத்தை மதித்தல் ஆகியவை நிறுவனம் நன்கு நடைபெற அவசியம் ஆகும்.
**கட்டளையொருமை:-** ஒவ்வொரு கீழ் பணியாளரும் ஒரே ஒரு மேலதிகாரிடமிருந்து மட்டுமே கட்டளைகளை பெற வேண்டும்.
**ஆணையுரிமை வரிசை:-** ஆணையுரிமையின் வரிசை உயர்மட்ட அலுவலரிடமிருந்து கீழ் மட்டத்தில் உள்ள பணியாளர் வரை படிப்படியாக கீழ்நோக்கி வர வேண்டும்.
**ஊதியம்:-** ஊதியம் என்பது பணியாளர்களின் பணிக்கு கொடுக்கப்படும் விலையாகும்.

**குறிப்பு:** அரசு வழங்கும் விடைக்குறிப்பினை ஒப்பிட்டு பார்த்து மைய மதிப்பீட்டு பணியை மேற்கொள்ளுமாறு ஆசிரியப் பெருமக்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்
www.maduraicommerce.com

Padasalai.Net



Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com